திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் நகரத்தில் நீண்ட காலமாக ஒருங்கிணைந்த பேருந்து வளாகம் இல்லாமல் பொது மக்கள் அவதிப்படுவதைக் குறித்து பலமுறை இந்த அவையில் பதிவு செய்தும், அந்தப் பணி இன்றுவரை தொடங்கப்படவேயில்லை. எனவே, பொது மக்களின் நலன் கருதி, இந்த நிதியாண்டிலேயே ஒருங்கிணைந்த பேருந்து வளாகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

(அஔ) விளாத்திகுளம் தொகுதி, புதிய ஊராட்சி ஒன்றியம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. P. சின்னப்பன் அவர்கள்.*

திரு. P. சின்னப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், எங்கள் மண்ணின் மைந்தர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

'தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடு வோம்
புது சரித்திரம் படைத்திடுவோம்'

என்று முழங்கிய மகாகவி பாரதியாரின் பெயரில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனி வட்டம் அமைத்தார்கள். அந்தப் பகுதியிலே ஊராட்சி ஒன்றியம் இல்லை. அந்தப் பகுதி, விளாத்திகுளம், புதூர் மற்றும் ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கிய பகுதியாக உள்ளது. அங்கே தனியாக ஓர் ஊராட்சி ஒன்றியம் அமைத்திட வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விழைகிறேன்.

(ஆஅ) செங்கல்பட்டு தொகுதி, மதுராந்தகம் ஏரியைத் தூர் வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*